செ.வெ.எண்.12 நாள். 12.2.18

# பத்திரிக்கை செய்தி

கடலூர் மாவட்டத்தில் அனைத்து வட்டங்களிலும் கிராம ஆவணங்களான சிட்டா மற்றும் "அ" பதிவேடு கணினிமயமாக்கப்பட்டு இணையதள வழி மூலம் பட்டா மாற்றம் செய்யும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம் பொதுமக்கள் பட்டா மாறுதல் தொடர்பான கோரிக்கைக்காக சம்மந்தப்பட்ட வட்ட அலுவலகங்களுக்கு நேரில் சென்று மனு அளிக்கும் முறை தவிர்க்கப்பட்டு, அந்தந்த கிராம பகுதி மற்றும் கிராம பஞ்சாயத்து எல்லைக்கு அருகாமையிலும் உள்ள கீழ்கண்ட மையங்களில் இணையதள வழி மூலம் பட்டா மாறுதல் மனுக்களை அளிக்கலம்.

1. அரசு இ-சேவை யைமங்கள்.
2. தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள்.
3. வட்டாட்சியர் அலுவலகத்தில் இயங்கும் இ-சேவை மையம்.
4. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இயங்கும் இ-சேவை மையம்.

பொதுமக்கள் பட்டா மாறுதல் தொடர்பான மனுக்கள் அளிக்கும்போது கீழ்கண்ட ஆவணங்கள் இ-சேவை மையத்தில் அளிக்க வேண்டும்.

**உட்பிரிவு ஏற்படாத பட்டா மாற்ற மனுக்கள்:**

1. அசல் கிரைய பத்திரம்.
2. மூல பத்திரம்.
3. இறப்பு சான்றிதழ் (தேவைப்படும் மனுக்களுக்கு).
4. வாரிசு சான்றிதழ் (தேவைப்படும் மனுக்களுக்கு).
5. தற்போது உள்ள சிட்டா நகல்.
6. பாக விடுதலை பத்திரம்.
7. பாக பத்திரம் (தேவைப்படும் மனுக்களுக்கு).
8. நீதிமன்ற தீர்ப்பு நகல்.
9. வில்லங்க சான்றிதழ் 30 ஆண்டுகள்.
10. தான செட்டில்மெண்ட் பத்திரம்.
11. உயில் பத்திரம்.
12. பொது அதிகார பத்திரம் (GPA Documents).
13. பொது அதிகார பத்திரம் கொடுத்தவர் உயிருடன் இருப்பதற்கான சான்றிதழ் ( Live Certificate)

**உட்பிரிவு ஏற்படும் பட்டா மாற்றம் எனில் மேற்கண்ட 13 ஆவணங்களுடன்:**

1. Sub-division Fees செலுத்தப்பட்ட அசல் சலான் (அல்லது) சார் பதிவாளர் அலுவலகத்தில் வழங்கப்படும் அசல் உட்பிரிவு கட்டண ரசிது.
2. அங்கீகரிக்கப்பட்ட மனைபிரிவு வரைபடம்.

த.பி.பா...

எனவே, பொதுமக்கள் இந்த வசதியை பயன்படுத்தி பட்டா மாறுதல் மனுக்கள் மீது விரைந்து தீர்வு காண குறிப்பிட்டுள்ள ஆவணங்களை விடுபாடின்றி அளித்து மனுக்கள் தள்ளுபடி செய்வதை தவிர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கடலூர்.

9.2.18

9/2/18

9/2/18